00269

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 06

EPU6231 – ஆரம்பப் பாடசாலை அமைப்பில் வழிகாட்டலும் உளவளத்துணையும்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 28.06.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 03.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. "வழிகாட்டல்", "ஆலோசனை வழங்கல்" ஆகிய பதங்களை பொருத்தமான வரைவிலக்கணத்துடன் வரையறை செய்க.
2. "வழிகாட்டல்", "ஆலோசனை வழங்கல்" ஆகியவற்றிற்கு இடையிலான முக்கியமான வேறுபாடுகள் **இரண்டினைச் (02)** சுருக்கமாக விளக்குக.
3. "மனஅழுத்த நிகழ்வுகள் பிள்ளைகளிடத்தில் சீராக்கல் குறைபாடுகளை (Adjustment Disorders) வழிநடத்துகின்றன."

   மேற்கூறிய கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகளின் நடத்தை வருவிளைவுகளில் (Out Comes) செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கலந்துரையாடுக.
4. "பிரச்சினைக்குரிய நடத்தைகள்" (Problem behaviors) எனும் பதத்தினை உதாரணங்களுடன் விபரிக்குக.
5. பாடசாலைப் புறக்கணிப்பின் அறிகுறிகளை (School Refusal) பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.
6. பிள்ளைகளின் நடத்தை சரிபார்ப்பு பட்டியல்களை (Child Behavior Checklist) அதனது செயற்பாடுகள் தொடர்பாக விபரிக்க.
7. பிள்ளைகளின் உளவியல் விருத்தியின் உளபாலியல் பருவங்கள் **ஐந்தினைச் (05)** சுருக்கமாக விளக்குக.
8. "வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல்" இன் முக்கிய அம்சங்கள் **ஐந்தினைப் (05)** பட்டியல்படுத்தி, அவற்றின் யாதாயினும் **இரண்டினைச் (02)** சுருக்கமாக விளக்குக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. i. கல்விச்சூழல் ஒன்றுடன் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலின் நோக்கங்கள் ஆகக் குறைந்தது **ஐந்தினை (05)** உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

   (10 புள்ளிகள்)

   ii. வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலின் பிரதான செயற்பாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

   (10 புள்ளிகள்)



95

10. i. ஆரம்ப பாடசாலை மாணவர்களின் சீராக்கல் பிரச்சனைகள் (Adjustment Problems) ஆகக்குறைந்தது **நான்கினை (04)** உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. பிள்ளைகளின் மத்தியில் காணப்படுத் சீராக்கல் பிரச்சழனைகளில் செல்வாக்குச் செலுத்தும் சூழல் காரணிகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விபரிக்குக.
(10 புள்ளிகள்)

11. i. பிள்ளைகளின் ஒவ்வொரு கட்டத்தினதும் பொருத்தமான விருத்தியில், மனவெழுச்சி (Emotional), அறிவாற்றல் (Cognitive), சமூக (Social) மற்றும் உயிரியல் காரணிகளின் முக்கிய வகிபங்கினைக் கலந்துரையாடுக.
(08 புள்ளிகள்)

ii. ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மத்தியில் அவதானிக்கக்கூடிய சீராக்கல் பிரச்சினைகளுக்கான (Adjustment Problems) மிகப் பொதுவான காரணிகளை விளக்குக.
(12 புள்ளிகள்)

12. i. பிள்ளைகளின் பிரச்சினைக்குரிய நடத்தைகளைக் குறைப்பதற்கு பராமரிப்பாளர்களுக்கு (Caregivers) உதவுவதில் நேர்மறையான வழிகாட்டல் (Positive Guidance) இன் முக்கியத்தவத்தினை விளக்குக.
(06 புள்ளிகள்)

ii. சீராக்கல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய பிள்ளைகளுக்காக பிள்ளையொன்றின் மனநோய் மருத்துவர் (Psychiatrist) மற்றும் சிகிச்சையாளரின் (Therapist) சிகிச்சை செயன்முறையின் பங்களிப்பினை விபரிக்குக.
(06 புள்ளிகள்)

iii. பாடசாலை அமைப்பிலுள்ள மாணவர்களின், பிரச்சினைக்குரிய நடத்தை முகாமைத்துவத்தின் பலங்கள் (Strengths) மற்றும் வரையறைகளை (Limitations) பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

13. பின்வருவனவற்றில் ஏதேனும் **இரண்டிற்கு (02)** சிறுகுறிப்பு எழுதுக.
   i. வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலில் ஒழுக்கவியற் கோவையின் முக்கியத்துவம்
   ii. இலங்கையில் ஆலோசனை வழங்கல் (Counseling) சேவையின் வரலாறு
   iii. பாடசாலைகளின் வினைத்திறனான ஆலோசனை வழங்குநரின் பண்புகள்
   iv. வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கலில் பல்வகைமைத்தன்மை (Diversity)
(10x2=20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -